**சக்தி பௌண்டேஷன் - தமிழ் CCC வகுப்பு**

**தர்மம் தலை காக்கும் [மஹாபாரதத்திற்கும் முற்பட்ட வரலாறு]**

---

ஒரு காலத்தில் வடபாரதத்தில் மஹாபாரதப் போர் நிகழ்ந்த குருஷேத்ரத்தில் தொடர்ந்து மழை பெய்யவில்லை, அதை ஒட்டிக் கடுமையான பனிப்புயல் வேறு வீசியதால் மக்கள் உயிர் இழக்கவும் நேரிட்டது. உயிர்கள் இறந்தன. அவரவர் வேறு ஊர் நாடிப் பிழைக்க வழி தேடிச் சென்றனர்.

அவ்வூரில் வாழ்ந்த இளைஞன் **உஷஸ்தி** சிறந்த வேத வித்வான், மஹாபண்டிதன். மிக இளைய வயதிலேயே கல்வியில் மிகவும் உயர்ந்த நிலையை எட்டினான். பண்பும்-அன்பும் கொண்டவன் உஷஸ்தி. அவன் குருஷேத்ரத்தில் வேதபாட சாலையை அமைத்துக் கொண்டு ஆசிரியர் தொழில் செய்தான். அவனுக்குக் கல்யாணம் ஆனது, அவன் மனைவி பெயர் **ஆடிகி**.

இருவரும் மிக நல்ல முறையில் குடும்பம் நடத்திய காலத்தில் தான் இந்த பனிப்புயல் வந்து அனைவரையும் சீரழித்தது. ***உஷஸ்தி எதையுமே ஏன்-எதற்கு-எப்படி-எதனால் என்று பகுத்து ஆய்ந்தே ஏற்றுக் கொள்வான். கண்மூடித்தனமாக எதையுமே செய்ய மாட்டான். வேதங்களையும் அவன் மிக ஸ்ரத்தையுடன் ஆசிரியரிடம் கற்றது போக, தானே*** *selfstudy self exploration* ***செய்து பல ஆழ்ந்த பொருள்களை உணர்ந்து தெளிவான். அதையே தன் மாணாக்கருக்கும் கற்றுத் தந்தான்***. இதனால் இவனிடம் சேரத் துடிக்கும் சிஷ்யக்கூட்டம் அதிகம் ஆன வேளையில் தான் இயற்கைச் சீற்றத்தால் உஷஸ்தியும் தன் மனைவியுடன் குருஷேத்ரத்தை விட்டு வெளியேறும் சூழல் ஏற்பட்டு விட்டது.

தம்பதிகள் தெய்வங்களை ஸ்துதி செய்து கொண்டே பல ஊர்களைக் கடந்தனர். எங்கும் பனிப்புயல் வீசி மக்கள் அல்லோலப் பட்ட காட்சியை எண்ணி எண்ணி இவன் மனம் தவித்தான். இயற்கைக்கு ஏற்ற வேத மந்த்ரங்களை முடிந்தவரை ஜெபித்தான்.

ஒரு கட்டம் வந்தவுடன் ஆடிகி மயங்கி விழுந்தே விட்டாள்."ஸ்வாமி! இனி என்னால் அடி எடுத்து கூட வைக்க முடியாது! என்னை விட்டுச் செல்லுங்கள்.வேறு ஊருக்குச் சென்று உங்கள் வேததர்மத்தைப் பரப்புங்கள்..." என்று மயங்கிச் சாய்ந்தே விட்டாள்.

கண் கலங்கிய இளைஞன் சற்று தூரத்தில் ஒரு யானையும் அதன் பாகனும் இருப்பதைக் கண்டு அருகில் சென்றான். அருகில் ஒரு சிறிய ஊற்றும் இருக்கக் கண்டான். யானைப் பாகன் கையில் யானைக்குக் கொடுக்கும் கவளச்சோறு இருக்கக் கண்டு,

"பவதி பிக்ஷாம் தேஹி! அடியேனுக்கு அச்சோற்றில் சிறிதேனும் அளியுங்கள்! இதனால் ஒரு உயிர் காப்பாற்றப்பட்ட புண்ணியம் உங்களையும் யானையையும் சேரும்! இது வேத சத்யம்!" என்று மிக பவ்யமாக பிக்ஷை கேட்டான்.

பாகனோ," ஐயா! நீங்கள் அந்தணர், அடியேன் தாழ்ந்த குலம், நான் தரும் உணவை உண்பது சரி இல்லையே?" என்றான்.

உஷஸ்தி, "***ஐயா! உயிர் காக்கும் மருந்தான உணவை யார் தந்தாலும் அவன் உயர்ந்த பகவானே! மேலும் தர்மத்தைக் காக்க ஒருவன் தன் அனைத்து கௌவரங்களையும் இழக்க வேண்டும்! இப்போது என் மனைவியின் உயிரைக் காக்கும் அக்னி சாட்சியான இல்லற தர்மத்தைக் காக்க வேண்டும், எனவே என் குலம்-சாதி-கல்வி என அனைத்தையும் இழந்து யாசிக்கிறேன்! என் தர்மத்தைக் காப்பாற்றிய மஹாபுண்ணியம் உமக்கும் யானைக்கும் உண்டு***!" என்று கூறியவுடன் அவன் கையில் பாகன் ஒரு பகுதி சோற்றையும் ஊற்று நீர் எடுக்கத் தன் குடுவை [bottle] யையும் தந்து பாராட்டினான்.

விரைவில் இவற்றுடன் தன் மனைவியை அண்டிய அவன் அவள் மயக்கம் தீர்ந்து உட்கார்ந்து இருப்பதைக் கண்டு மகிழ்ந்து, "ஆடிகி! எப்படி உன் மயக்கம் தீர்ந்தது?" என்று கேட்டான்.

ஆடிகி,"ஸ்வாமி! நீங்கள் போனதும், என்னுள் சதா அக்னி தேவனின் மூல மந்த்ரங்களை முடிந்த மட்டும் ஜெபித்து உங்களைக் காக்க வேண்டினேன். அப்போது சிலர் இவ்வழியே போயினர். என் நிலை கண்டு, வாயில் தண்ணீர் ஊற்றினர். சிறிது தேன் கலந்து பிசைந்த தினை மாவையும் ஊட்டினர், உங்களின் பசிக்கு உணவிடும் தர்மம் என்னுடையது என்று வேண்டி அடியேனும் அவரிடத்தே யாசித்து உமக்காக சிறிது வைத்திருக்கிறேன், உண்ணுங்கள்!" என்றாள்.

"தர்மத்தைக் கடைப்பிடிக்க எதையும் செய்ய வேண்டும் என்று அடிக்கடி வேதத்தில் கற்ற பாடத்திற்கு இன்று அதைக் காட்டும் காலம் தந்த இயற்கையை என்ன என்று போற்றுவது? சரி வா இவற்றை உண்டு போகலாம்!" என்று

இருவரும் தாம் பெற்ற கவளச்சோற்றையும் மாவையும் நீரையும் பகவானுக்கு அர்ப்பணம் செய்து அவ்வுணவை அனைத்து ஜீவன்களையும் அத்வைத்த ரீதியாக உள்ளுள் உணர்ந்து உண்ட போது அக்னியும் சூரியனும் வானில் தோன்றி புயலை மாற்றினர்.

எங்கே மக்கள் தர்மத்தைக் கடைப்பிடிக்கின்றனரோ அவர்களுக்கே இயற்கை உதவும் என்ற வேத உண்மையை இளம் தம்பதியினர்.

விரைவில் அவர்கள் அஸ்தினாபுரம் [இன்றைய Delhi] சென்றனர், அரசனின் மிகப்பெரிய ஒரு இயற்கைச்சீற்றத்தை மாற்றும் யாகத்தில் உஷஸ்தி கலந்து கொண்டான். அதில் இருந்த பல வேத பண்டிதர்கள் தப்புத்தப்பாய் மந்த்ரங்களைக் கூற , அவன் மிக தைர்யமாக அவற்றைத் திருத்தினான்.ராஜா இதை அறிந்து,

"அப்பனே! சிறிய வயது கொண்ட நீ யார்?" என்றிட,

"அடியேன் குருஷேத்ர சக்கிர ஷர்மா மகன் உஷஸ்தி" என்று கூற,

"உங்களைத் தானே தேடி உம்மூர் சென்று திரும்பினோம்! உம் வேத ஞானத்தைப் பற்றிப் பல இடங்களில் கேள்விப்பட்டும் இருக்கிறேன்! நீரே முன் நின்று யாகம் செய்யும்!" என்று வேண்டிட, சுயநல எண்ணம் சற்றும் இல்லாத உஷஸ்தி இயற்கையை மனமுருகி வேண்டி யாகம் செய்து, தன் தர்மத்தையே ஆவிர்பாஹமாகத் தர பஞ்சபூதங்களும் கட்டுப்பட்டு இயங்கின! நாட்டில் மீண்டும் சுபிக்ஷம் வந்தது. அனைவரும் வளமான வாழ்வு பெற்றனர்.

கற்பதைத் தெளிவாகக் கற்க வேண்டும், அதைப் பின்பற்ற வேண்டும், தர்மத்தை என்றுமே கடைப்பிடிக்க வேண்டும், தவறுகளை தைர்யமாக எடுத்துக் கூற நாம் முதலில் தெளிவாக இருக்க வேண்டும், நாம் ஜெபிக்கும் மந்த்ரங்கள் என்றுமே பலன் தரும், உலக நன்மையைக் கருத்தில் கொண்டே ப்ரார்த்தனைகள் இருக்க வேண்டும். இதையே உஷஸ்தியின் வரலாறு உணர்த்துகிறது.

ஹரி ஓம்!
ஹரி சரணம்!